

கழகத் தலைவர்மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கழகச் சார்பு அணிகளின் வருங்கால செயல்பாடுகள் மற்றும் அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் குறித்தும், முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு, எம்.எல்.ஏ., அவர்களின் தலைமையிலான மறுசீரமைப்புக் குழுவின் ஆலோசனைக் கூட்டத்தில், கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவரும் கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலருமான தயாநிதி மாறன் எம்.பி. பங்கேற்ற நிகழ்வில் கழக மறுசீரமைப்புக் குழு உறுப்பினர்களான ஆர்.சக்கரபாணி, எம்.எல்.ஏ., திருமதி.கீதா ஜீவன், திருமதி.தமிழரசி ரவிக்குமார், இ.பரந்தாமன், எஸ்.கே.பி.கருணா, கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் மாநில துணைச் செயலாளர்கள் சுரேஷ் ஜெ.மனோகரன், ஏ.வி.ஆர்.கோபால் ராம், மு.வாசிம் ராஜா, செல்வி.நிவேதா ஜெசிக்கா, வே.கௌதமன் ஆகியோர் பங்கேற்றனர்.

தூத்துக்குடியில் ஆதிதிராவிடர் மாணவர் விடுதியில் மாணவன் காணாமல் மாயம்!

விரைந்து செயல்பட்டு மாணவனைக் கண்டறிய வேண்டும்!

கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. சமூக வலைதளப் பதிவில் வலியுறுத்தல்!

சென்னை, நவ.5- தூத்துக்குடியில் ஆதிதிராவிடர் மாணவர் விடுதியில் மாணவன் காணாமல் மாயம்! விரைந்து செயல்பட்டு மாணவனைக் கண்டறிய வேண்டும் என கனிமொழிராஜாத்திகருணாநிதி எம்.பி. சமூக வலைதளப் பதிவில் வலியுறுத்தியுள்ளார்.

அப்பதிவு வருமாறு:- தூத்துக்குடியில் அரசு



ஆதிதிராவிடர் மாணவர் விடுதியில் தங்கிப் படித்து வந்த 8-ஆம் வகுப்பு மாணவன் காணாமல் போய் நான்கு நாட்களாகியும் மாணவனை இதுவரை காவல்துறை கண்டுபிடிக்காமல் இருப்பது அதிர்ச்சியளிக்கிறது.

த.வெ.க. ஆட்சியில் தமிழ்நாட்டில் சிறுவர்கள் காணாமல் போவது சர்வ சாதாரணமாகிக் கொண்டிருக்கிறது. ஏற்கனவே செஞ்சி சிறுமி காணாமல் போய் 20 நாட்களுக்கு மேலாகியும் கண்டுப்பிடிக்காத காவல்துறை, தூத்துக்குடி மாணவன் காணாமல் போன விவகாரத்திலும் மெத்தனமாக செயல்படுவது கண்டிக்கத்தக்கது. இனியும் காலம் தாழ்த்தாமல் விரைந்து செயல்பட்டு மாணவனை கண்டறிய வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

இயக்கம் காக்கும் போர்ப்படைச் சிப்பாய்களான

1,100 கழக மகளிர்க்கு சிறப்புச் செய்வதில் பெருமகிழ்ச்சி!

சென்னை கிழக்கு மாவட்ட மகளிர் அணி – மகளிர் தொண்டரணி நிர்வாகிகளுக்கான தீப ஒளித் திருநாள் சிறப்பு நிகழ்வில் முன்னாள் அமைச்சர் பி.கே. சேகர்பாபு எம்.எல்.ஏ. பேச்சு!

சென்னை, நவ.5- சென்னை கிழக்கு மாவட்டக் கழக மகளிர் அணி - மகளிர் தொண்டரணி சார்பில், தீப ஒளித் திருநாளை முன்னிட்டு 1,100 மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டரணி நிர்வாகிகளுக்குச் சிறப்புச் செய்யும் நிகழ்ச்சி, சென்னை வேப்பேரி, அனிதா பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள B.K.N. மஹாலில் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மேனாள் அமைச்சருமான பி.கே. சேகர்பாபு எம்.எல்.ஏ. கலந்து கொண்டு, மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் 1,100 பேருக்குப் புடவை, இனிப்பு, காரம், பட்டாசுகள் மற்றும் பரிசுப் பொருட்களை வழங்கிச் சிறப்பித்து, தீப ஒளித் திருநாள் நல்வாழ்த்துகளைத் தெரிவித்தார்.



இந்நிகழ்ச்சியில் கழக மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன், சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், கழகச் சட்டத் துறை இணைச் செயலாளர் கே.எஸ். இரவிச்சந்திரன், கழகச் செய்தித் தொடர்பு இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா, கே.எஸ். எம். நாதன், சொ. வேலு, வி. சுதாகர், மாமன்ற உறுப்பினர்கள் புனிதவதி எத்திராசன், சரிதா மகேஷ்குமார், சுதா தீனதயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், ஏ.பி. பூர்ணிமா, அ. நிர்மலா தேவி, டாக்டர் ஜி. சாந்தகுமாரி, எழும்பூர் வடக்கு - தெற்கு வட்டக் கழகச் செயலாளர்கள் வி. விஜயகுமார், ஆர். பாபு, டால்பின் எஸ். ஹரிகிருஷ்ணன், எஸ். ரசூல், எல். சுந்தர்ராஜன், வான்மதி கதிரவன், வி. அபாய், தி. தயாளன், த. பாலு, சு. மனோகரன், ஆர்.எம். ரங்கநாதன், சி. சேகர் மற்றும் கழக முன்னணியினர், மகளிர் அணி, மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் பிரபல இசைக் கலைஞர்கள் கானா பாலா, இசைவாணி உள்ளிட்டோர் பல்வேறு பாடல்களைப் பாடி, மகளிர் அணியினரை மகிழ்வித்தனர்.

நிகழ்ச்சியில் பி.கே. சேகர்பாபு எம்.எல்.ஏ. பேசியதாவது:

"தமிழகத்தில் இன்று நடைபெற்றுக் கொண்டிருப்பது நரகாசுரன் ஆட்சி. புராணத்தில் நரகாசுரன் தேவர்களைக் கொடுமைப்படுத்தியதாகக் கூறப்படுகிறது. அதே போன்று இன்றைய ஆட்சியில் கொடுமைகளை அனுபவித்துக் கொண்டிருப்பவர்கள் தமிழக மக்கள்தான்.

தமிழகத்தின் நரகாசுரனை எப்போது நாம் அழிக்கிறோமோ, அப்போதுதான் தமிழக மக்களுக்கு உண்மையான தீபாவளி!

கடந்த முறை நடைபெற்ற கூட்டத்தில் 7ஆம் தேதி பேசிய மாமன்ற உறுப்பினர் மீது 19ஆம் தேதி வழக்குப் பதிவு செய்திருக்கிறார்கள். அதன்பிறகு அவர் உடல் நலக் குறைவால் சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார்.

அவரைப் பாதுகாப்பது மாவட்டக் கழகச் செயலாளர் என்ற முறையில் என்னுடைய கடமை. அவரை மட்டுமல்ல, இங்கு கூடியிருக்கும் ஒவ்வொரு மகளிரையும் பாதுகாப்பதும் என்னுடைய கடமைதான்.

வழக்குகளைக் காட்டி எங்களை அச்சுறுத்திவிடலாம் என்று யாரும் நினைக்க வேண்டாம். கழக மகளிர் அணியினர் எதற்கும் அஞ்சாதவர்கள். இயக்கத்திற்காகவும் மக்களுக்காகவும் தொடர்ந்து களத்தில் நிற்பவர்கள்.

சென்னை கிழக்கு மாவட்டத்தில் இயக்கத்தைக் காக்கும் போர்ப்படைச் சிப்பாய்களாக விளங்கும் 1,100 உண்மையான சிங்கப்பெண்களுக்கு இன்று சிறப்புச் செய்யப்படுகிறது.

கழகத்தின் வலிமையாகவும், இயக்கத்தின் பாதுகாப்பு அரணாகவும் திகழும் மகளிர் அணியினருக்கு எனது தீப ஒளித் திருநாள் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

இவ்வாறு பி.கே. சேகர்பாபு எம்.எல்.ஏ. பேசினார்.

தீப ஒளித் திருநாளை முன்னிட்டு நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் 1,100 மகளிர் நிர்வாகிகளுக்குப் புடவை, இனிப்பு, காரம், பட்டாசுகள் மற்றும் பரிசுப் பொருட்கள் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டதுடன், இசை நிகழ்ச்சிகளும் நடைபெற்றதால் விழா உற்சாகமாக அமைந்தது.

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு

அனைத்து வழித்தடங்களிலும் சிறப்பு ரயில்கள் இயக்கிடுவீர்!

தயாநிதிமாறன் எம்.பி. வலியுறுத்தல்!

சென்னை, நவ. 5- கழக நாடாளுமன்ற குழுத் துணைத் தலைவரும் கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளருமான தயாநிதி மாறன் எம்.பி.யின் வலைதளப் பதிவு பின்வருமாறு :

சிறப்பு ரயில்கள் அறிவிக்கவும், கூடுதல் பெட்டிகள் இணைக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு ஏற்கனவே



வலியுறுத்தியிருந்த நிலையில், தீபாவளி பண்டிகையை முன்னிட்டு தென்னக ரயில்வே மேலும் பல்வேறு தடங்களில் சிறப்பு ரயில்களை அறிவித்துள்ளது.

இந்தச் சிறப்பு ரயில்களைத் தவிர, அனைத்து வழித்தடங்களிலும் வருகின்ற வெள்ளி மற்றும் சனி ஆகிய நாட்களிலும், பயணிகள் மீண்டும் சென்னை திரும்புவதற்கு வசதியாக வருகின்ற ஞாயிறு, திங்கள், செவ்வாய் ஆகிய நாட்களிலும் சிறப்பு ரயில்களை இயக்க நடவடிக்கை எடுக்குமாறு ரயில்வேத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

அண்டை மாநிலங்களின் வருவாய் வளர்ச்சியோடு ஒப்பிடும் போது

தமிழ்நாடு மிகப்பெரிய அளவில் பின் தங்கியுள்ளது!

முன்னாள் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு வலைதளப்பதிவு!

சென்னை, நவ.5- முன்னாள் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசுவின் வலைதளப்பதிவு வருமாறு:

மாநில நிதியமைச்சர் அவர்கள், எனது பதிவில் என்ன குறிப்பிடப்பட்டிருக்கின்றது என்பதையே கருத்தில் கொள்ளாமல், வழக்கம் போல பதிலளிக்க முயன்றிருக்கின்றார்.

இந்த வருடம் அக்டோபர் மாதம் ஜி.எஸ்.டி. வரி வருவாய் 3% என்ற அளவில்



மட்டுமே அதிகரித்துள்ளதை என்னுடைய பதிவிலேயே நான் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளேன். அதே வேளையில், இறக்கு மதியினால் கிடைக்கும் வரி வருவாயினால்தான் ஒட்டு மொத்த வரி வருவாயில் உயர்வு காணப்படுகிறதே தவிர, மாநிலத்தின் சொந்த உற்பத்தி மூலம் ஈட்டப்படும் வரிவருவாயால் அல்ல என்பதையும் நான் எடுத்துக்காட்டி இருக்கின்றேன். அண்டை மாநிலங்களின் வருவாய் வளர்ச்சியோடு ஒப்பிடும்போது நாம் மிகப் பெரிய அளவில் பின் தங்கியிருக்கிறோம் என்ற உண்மையை ஒப்புக்கொண்டு, மாநிலத்தின் சொந்த உற்பத்தியையும், விற்பனையையும் பெருக்கிப் பொருளாதார மேம்பாட்டிற்கும், வேலை வாய்ப்புக்களுக்கும் வழிவகை காண அரசு முயற்சிக்க வேண்டுமே தவிர, புண்ணுக்குப் புனுகு பூச முயற்சிப்பதில் பயனேதுமில்லை.

இவ்வாறு அவர் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

திருமழிசையில் டெங்கு காய்ச்சல் பாதிப்பு அதிகரிப்பு!

10 வயது சிறுவன் உயிரிழப்பு; 30-க்கும் மேற்பட்டோர் பாதிப்பு!

திருவள்ளூர், நவ. 5- திருவள்ளூர் மாவட்டம், திருமழிசை பகுதியில் டெங்கு காய்ச்சல் பாதிப்பு அதிகரித்து வருவது அப்பகுதி மக்களிடையே பெரும் அச்சத்தையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது. டெங்கு காய்ச்சலால் திருமழிசை பகுதி சார்ந்த பாஸ்கரன் தேவி ஆகியோர் 10 வயது மகன் சந்தோஷ்குமார் பாதிக்கப்பட்ட உயிரிழந்தார் 30-க்கும் மேற்பட்டோர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப் பட்டுள்ளது

இந்நிலையில், அப்பகுதியில் டெங்கு காய்ச்சலைக் கட்டுப்படுத்த வேண்டிய கொசு ஒழிப்புப் பணிகள் மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்படவில்லை எனப் பொது மக்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

குறிப்பாக, குடியிருப்புப் பகுதிகளில் தேங்கிக் கிடக்கும் தண்ணீரை அகற்றுதல், கொசு மருந்து தெளித்தல், கழிவுநீர் கால்வாய்களைச் சீரமைத்தல், சுற்றுப்புறத் தூய்மையைப் பராமரித்தல் உள்ளிட்ட அடிப்படை சுகாதாரப் பணிகளில் போதிய கவனம் செலுத்தப்படவில்லை என அப்பகுதி மக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் வேதனை தெரிவிக்கின்றனர்.

டெங்கு காய்ச்சல் பரவலைத் தடுக்க வேண்டிய மாவட்ட நிர்வாகமும் சுகாதாரத் துறையும் உரிய நேரத்தில் தீவிர முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறி விட்டதாகவும் அவர்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

10 வயது சிறுவனின் உயிரிழப்பு இனியும் தொடரக்கூடாது. பொதுமக்களின் உயிர் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு திருமழிசை பகுதியில் உடனடியாக சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்த வேண்டும். வீடு வீடாகச் சென்று காய்ச்சல் பாதிப்புகளைக் கண்டறிய வேண்டும். கொசு ஒழிப்புப் பணிகளைத் தீவிரப்படுத்தி, சுகாதாரச் சீர்கேடுகளைப் போர்க்கால அடிப்படையில் சரிசெய்ய வேண்டும்.

மக்களின் உயிர் பாதுகாப்பில் அலட்சியம் காட்டாமல், டெங்கு தடுப்பு நடவடிக்கைகளை உடனடியாகத் தீவிரப்படுத்த வேண்டும் என ரீல்ஸ் விஜய் அரசுக்கும், மாவட்ட நிர்வாகத்துக்கும், சுகாதாரத்துறைக்கும் திருமழிசை பகுதி பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

சென்னை மாநகராட்சி 105 வது வார்டு

மாமன்ற உறுப்பினர் ந.அதியமான் மீது வழக்குப் பதிவு!

விசாரணைக்கு காவல்நிலையத்திற்கு அழைத்து அலைக்கழிப்பு!

சென்னை, நவ.5- அண்ணாநகர் தொகுதி 105 வது வார்டின் செயலாளரும் மாமன்ற உறுப்பினருமான ந.அதியமான் அவர்கள் அவருடைய வார்டில் மழைக்காலத்திற்கு முன்பாக மழைநீர் வடிகால்களின் தூர் வாரும் பணி நடைபெற வேண்டும் என்று பல முறை மாநகராட்சியில் வலியுறுத்தியும் அதை செயல்படுத்தாத தி.வெ.க. அரசைச் கண்டித்து சுவரொட்டிகள் ஒட்டியதால் தி.வெ.க. நிர்வாகி கொடுத்த புகாரில் கவுன்சிலர் அதியமான் மீது எஃப்.ஐ.ஆர். பதிவு செய்யப்பட்டது அது குறித்து மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு மாநகராட்சியில் கடுமையாக கண்டன உரையாற்றினார்கள். இருப்பினும் நேற்று முன்தினம் விசாரணைக்காக அரும்பாக்கம் கே8 காவல் நிலையத்திற்கு அழைக்கப்பட்டு விசாரணை நடைபெற்றது.

சேலம் மாநகராட்சியின் நிகழ்ச்சிகளுக்கு

மேயர் - மாமன்ற உறுப்பினர்களை அழைக்க ஆணையாளர் மறுப்பு!

சேலம், நவ. 5- சேலம் மாநகராட்சியில் தி.மு.க. ஆட்சி காலத்தில் நிதி ஒதுக்கி பள்ளி கட்டிடங்கள் அங்கன் வாடி மையங்கள் நியாய விலைக் கடைகள் கட்டி முடிக்கப் பட்டது இதன்படி சேலம் மாநகராட்சி 43 வது கோட்டத்தில் உள்ள கிச்சிப் பாளையம் புதுத்தெரு பள்ளியை புதிதாக கட்ட தி.மு.க மாமன்ற உறுப்பினர். எம். குண சேகரன் கடந்த 2024ம் ஆண்டு உள்ளாட்சி துறை அமைச்சரிடம் நேரில் சென்று ரூ 1 கோடியே 20 லட்சம் புதிய கட்டிடம் கட்ட பெற்றுக் கொடுத்ததில் கட்டப் பட்டது தான் இந்த பள்ளி கட்டிடம் உள்ளாட்சி நிதியில் இருந்து கட்டப்பட்டது அப்படி இருக்கையில் சேலம் மாநகர மேயர், அந்த கோட்டத்தின் மாமன்ற உறுப்பினர் களிடம் பள்ளி கட்டிடம் அமைச்சர் திறந்து வைப் பதை குறித்து மாநகராட்சி ஆணையாளர் ஆலோசித்து இருக்க வேண்டும் ஆனால் ஆணையாளர் ஆதித்ய நீலம் அமைச்சரைக் கொண்டு திறப்பது குறித்து முடிவு செய்து விட்டு மேயருக்கும் நிதி பெற்றுத் தந்த மாமன்ற உறுப்பினர் எம். குணசேகரனுக்கும் மாநகராட்சி ஆணையாளர் அழைக்க வில்லை இது குறித்து நிகழ்ச்சிக்கு வந்திருந்த ஆணையாளரிடம் நேரில் இந்த நிகழ்ச்சிக்கு மேயரை ஏன்? அழைக்கவில்லை இந்த மாநகரின் முதல் குடிமகன் என்றும் நிதியை பெற்றுத் தந்த இந்த கோட்டத்தின் மாமன்ற உறுப்பினர் நான் எனக்கும் அமைச்சர் கட்டிடத்தை திறப்பது குறித்து கூறவில்லை என்று கடும் கண்டனத்தை தெரிவித்தார்

இந்த மாநகராட்சி ஆணையாளர் த.வெ.க கட்சியின் மாவட்ட செயலாளர் போல் கடந்த 6 மாத காலமாக நடந்து கொள்கிறார் மேயர் மாமன்ற உறுப்பினர்களை சந்திக்க மறுப்பதோடு மாமன்றத்தில் நிறை வேற்றும் தீர்மானங்களை மதிப்பதில்லை மேயர் மாமன்ற உறுப்பினர்கள் தீர்மானங்களை அரசுக்கு அனுப்பி வைப்பதில்லை. சேலம் மாநகராட்சி மக்களின் வரிப் பணத்தில் ஊதியம் பெறும் அதிகாரிகள் மக்கள் பிரதிநிதிகளை சந்திக்க மறுப்பது ஒரு அரசு அதிகாரி தனது கடமையில் தவறியதாக வே அரசு விதி கூறுவது குறிப்பிட தக்கதாகும்.